**செ.வெ.எண்:34** **நாள்:08.12.2018**

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**“கஜா” புயலால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம் வட்டம் சிறுதலைக்காடு மீனவ கிராமத்தில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை**

**பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஜெ.இராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள்**

**நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (07.12.2018) பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஜெ.இராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் “கஜா” புயலால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம் வட்டம், சிறுதலைக்காடு மீனவ கிராமத்தில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புயலால் பாதிக்கப்பட்ட சிறுதலைக்காடு மீனவ கிராமத்தில், புயலால் சேதமடைந்த வீடுகள், படகுகள், வலைகள், உபகரணங்கள் மற்றும் கோடியக்கரைப் பகுதியில் சேதமடைந்துள்ள உப்பளப் பகுதிகள் ஆகியவற்றை பார்வையிட்டு, அப்பகுதி மீனவர்களை சந்தித்து அவர்களிடம் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

சிறுதலைக்காடு அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தினை பார்வையிட்டு, அங்குள்ள குடிநீர் தொட்டியினை ஆய்வு செய்து, தொற்று நோய் பரவாமல் தடுக்க, தவறாமல் குளோரினேசன் செய்யுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்ட சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள், பள்ளி வளாகத்தில் புயலால் ஏற்பட்டுள்ள சிறு குறைபாடுகளை சரிசெய்து, பள்ளி வளாகத்தினை சுகாதாரமாகப் பராமரிக்க பள்ளித் தலைமையாசிரியரிடம் அறிவுறுத்தினார்.

மேலும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணம் கிடைக்கச் செய்யும் வகையில் அரசு துரிதமாக செயல்பட்டு, கணக்கெடுப்பு விவரங்கள் கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**